# வல்வெட்டித்துறை நகராட்சி மன்றம்

## செயலாற்றுகை அறிக்கை

## 2022

# 2022 ஆம் ஆண்டுக்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

**மாகாணத்தின் பெயர் :- வடமாகாணம்**

**உள்ளுராட்சி நிறுவனத்தின் பெயர் :- வல்வெட்டித்துறை நகராட்சிமன்றம்**

**உள்ளடக்கம்**


அத்தியாயம் 01- நிறுவனத்தின் சுருக்க விபரம்/ நடைமுறைப்படுத்தல் சுருக்கம்

அத்தியாயம் 02- முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்கு

அத்தியாயம் 03- வருடத்தின் ஒடடு மொத்த நிதிச் செயலாற்றகை

அத்தியாயம் 04- செயலாற்றுகைக் குறிகாட்டிகள்

அத்தியாயம் 05- பேண்தகு அபிவிருத்திக் குறிக்கோள்களைப் (SDG) பூர்த்தி செய்யும் செயலாற்றுகை

அத்தியாயம் 06- மனித வளம் பற்றிய சுருக்க விபரம்

அத்தியாயம் 07- இணக்கப்பாட்டு அறிக்கை

## அத்தியாயம் 01- நிறுவன விபரக்குறிப்பு / நிறைவேற்றுப் பொழிப்பு

### 1.1 அறிமுகம் :

வட மாகாணத்தின் வடமராட்சி வடக்கு பிரதேச செயலக பிரிவுக்குற்பட்ட பிரதேசத்தில் கடற்கரையோரமாக அமையப்பெற்றுள்ளது வல்வெட்டித்துறை நகராட்சி மன்றம். ஆரம்பத்தில் பட்டின சபையாக இருந்து வந்த இது, 1971ஆம் ஆண்டு முதல் வல்வெட்டித்துறை நகராட்சி மன்றமாக தரமுயர்த்தப்பட்டு தமது ஆளுகைக்குட்பட்ட மக்களுக்கு சிறந்த சேவைகளை வழங்கி வருகின்றது. எமது பிரதேசமானது கிழக்கே பொலிகண்டி தொடக்கம் மேற்கே தொண்டமனாறு வரை உள்ள கிராமங்களை உள்ளடக்கியதாகும்.

இந்நகராட்சி மன்றமானது 12 கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கி 09 வட்டாரங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. அதனுடைய பரப்பளவு 5.36 சதுரகிலோமீற்றராக இருப்பதோடு இங்கு வசிக்கும் மொத்த சனத்தொகை 9228 ஆகும். மேலும் இந்நகரசபையில் 282 வர்த்தக நிலையங்களும் 7541 ஆதனவரி அலகுகளும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

### 1.2 நிறுவனத்தின் தூரநோக்கு மற்றும் பணிநோக்கு

**தூர நோக்கு:**

நிலைபேறான அபிவிருத்தியினூடாக பொருளாதாரம் மேம்படுத்தப்பட்ட தூய்மைமிகு வல்வை நகர்.

**பணிக்கூற்று**

சக பங்குதாரர்களுடன் ஒன்றிணைந்து உள்ளூர் வளங்களை வினைத்திறனான முறையில் பயன்படுத்தி உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி பொருளாதாரத்தை உயர்த்துவதுடன் உயர்ந்த வாழ்க்கைத் தரத்தை மக்களுக்கு வழங்குதல்.

**குறிக்கோள்**

2023ம் ஆண்டில் நகராட்சி மன்ற பிரதேசத்தினை நவீனமயப்படுத்தல்.

### 1.3 பிரதான தொழிற்பாடுகள்

வல்வெட்டித்துறை நகராட்சி மன்றம், அரசாங்க கொள்கைகளுக்கும் உள்ளூராட்சி மன்றங்களுக்குரிய சேவை வழிகாட்டிகளுக்கமையவும் நகர சபை கட்டளைச்சட்டம் அத்தியாயம் 255 மற்றும் தொடர்புடைய சட்ட விதிமுறைகளுக்கமையவும் பொது நிர்வாகம், சுகாதார சேவைகள், பௌதீகத்திட்டமிடல், நீர்சேவை, பொதுப்பயன்பாட்டுச்சேவை, நலன்புரிச்சேவைகள் என்பவற்றை உள்ளடக்கியதாக வருடாந்த வரவு செலவுத்திட்டத்தை தயாரித்து தேவையான செயற்திட்டங்களுக்கு போதுமான நிதி ஒதுக்கீடுகளை மேற்கொண்டு அதனடிப்படையில் அபிவிருத்தி திட்டங்களை நடைமுறைப்படுத்தி இப்பிரதேச மக்களிற்கு பல்வேறு சேவைகளை சிறப்புடன் ஆற்றி வருகின்றது.

## 1.5 வெளிநாட்டு உதவி கிடைக்கும் செயற்திட்டங்களின் தகவல்கள் (இருப்பின்) – 2022

1)

- **i)** செயற்திட்டத்தின் பெயர் - டீவு(2) – கெருடாவில் கந்தசாமி கோவில் 3ம் ஒழுங்கை புனரமைப்பு
- **ii)** பங்களிப்பு முகவர் நிறுவனம் - உலகவங்கி
- **iii)** செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவு – 5.31 மில்லியன்
- **iv)** செயற்திட்டக் காலப் பகுதி :- - 2021∴2022

2)

- **i)** செயற்திட்டத்தின் பெயர்- BT(3) – திண்மக்கழிவு முகாமைத்துவ களஞ்சிய அறை அமைத்தல்
- **ii)** பங்களிப்பு முகவர் நிறுவனம் - உலகவங்கி
- **iii)** செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவு - ரூபா 4.91 மில்லியன்
- **iv)** செயற்திட்டக் காலப் பகுதி :- - 2022

3)

- **i)** செயற்திட்டத்தின் பெயர்- (PT 1 ) Performance Transfer – 1st installment
- **ii)** பங்களிப்பு முகவர் நிறுவனம் - உலகவங்கி
- **iii)** செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவு - ரூபா. 3.6 மில்லியன்
- **iv)** செயற்திட்டக் காலப் பகுதி :- - 2021/2022

4)

- **i)** செயற்திட்டத்தின் பெயர்- Performance Transfer – 2nd installment
- **ii)** பங்களிப்பு முகவர் நிறுவனம் - உலகவங்கி
- **iii)** செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவு - ரூபா. 3.2 மில்லியன்
- **iv)** செயற்திட்டக் காலப் பகுதி :- - 2021/2022

## அத்தியாயம் 02 – முன்னேற்றமும் எதிர்கால நோக்கும்

**விசேட அடைவுகள் ,சவால்கள் மற்றும் எதிர்கால இலக்குகளை சுருக்கமாக விளக்குக.**

2022 ஆம் ஆண்டிற்கான செயற்பாடுகள் அனைத்தும் நகராட்சி மன்றத்தின் இலக்கினை அடைவதற்கு ஏற்ற வகையில் திட்டமிடப்பட்டு அதனடிப்படையில் வரவு செவு திட்டம் தயாரிக்கப்பட்டு சபையின் அனுமதியுடன் வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. எமது மன்றத்தின் தூர நோக்கத்திற்கமைவாக பொது மக்களின் அத்தியாவசிய தேவைகளுக்கு அமைய வீதிகள் புனரமைப்பு செய்யப்பட்டன. மேலும் சுயதொழில் செய்துவரும் குடும்பங்களிற்கு குறிப்பாக பெண் தலைமைத்துவ குடும்பங்களிற்கு அவர்களது சுயதொழிலுக்கு அவசியமான உபகரணங்கள் வழங்கப்பட்டன. மேலும் வறிய மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்காக கற்றல் உபகரணங்கள் வழங்கப்படுவதுடன் போசாக்கு குறைந்த சிறார்களுக்கு கர்ப்பிணிப் பெண்களுக்கும் போசாக்கு நிறைந்த நிறை உணவுகள் வழங்கி வைக்கப்பட்டதோடு வாழ்வாதார உதவிகளும் வழங்கப்பட்டன. மேலும் வீட்டுத்தோட்டத்தினை முன்னேற்றும் முகமாக 40 குடும்பங்களுக்கு விதைகள், பயிர்க்கன்றுகள், இயற்கைப்பசளைகள், இயற்கை கிருமிநாசினிகள், நீர்க்குழாய்கள் உள்ளடங்கலான வீட்டுத்தோட்ட உள்ளீடுகள் வழங்கப்பட்டன.

உத்தியோகத்தர்களின் குடிநீர் பிரச்சினைகளைத் தீர்க்கும் வகையில் அலுவலகத்திற்கு தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்பு சபையின் குழாய் மூலமான குடிநீர் இணைப்பினை பெற்றுக் கொள்வதற்கும் வசதி செய்து கொடுக்கப்பட்டது. சுற்றுச் சூழல் சுகாதார மேம்பாட்டுக்கான திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு சிரமதானங்கள் டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வு நடவடிக்கைகள் மரம் நடுதல் போன்றனவும் கட்டாக்காலி நாய்களை கட்டுப்படுத்தலுக்கான கட்டாக்காலி நாய்கள் பிடிக்கப்பட்டு சரணாலயத்திற்கு அனுப்பும் செயற்பாடுகளும் முன்னெடுக்கபட்டு அவற்றை நாய்கள் சரணாலயத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது.

கழிவகற்றல் முகாமைத்துவம் இவ்வாண்டில் முன்னேற்றம் அடைந்துள்ளது. கடந்த 03 வருடங்களாக பொது மக்களுக்கு விழிப்பூட்டி தேசிய கொள்கைகளுக்கு அமைவாக தரம் பிரிக்கப்பட்ட குப்பைகளை சேகரித்து அகற்றப்பட்டு வருகின்றது. உக்கக்கூடிய கழிவுகளை பசளையாக மாற்றும் திட்டத்திற்காக கரவெட்டி பிரதேசசபைக்கு அனுப்பப்பட்டு வருகின்றது. பிரதேசத்தை நவீனமயப்படுத்துவதற்கான பல திட்டங்கள் தயாரிக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மேலும் உக்கிய குப்பைகளை மக்களின் தேவைகருதி கோருபவர்களுக்கு விற்பனை செய்யும் முறை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்தகாலங்களில் அண்ணளவாக 8.3 மில்லியனாக காணப்பட்ட ஆதன வரி நிலுவைகள் நடுக்கட்டு உத்தியோகத்தரின் உள்ளீர்ப்பின் முலம் வினைத்திறனாக கிட்டத்தட்ட 5 மில்லியன் அளவில் சேகரிக்கப்பட்டது.

நகராட்சிமன்ற நிர்வாக எல்லைக்குட்பட்ட வீதிகளின் பெயரையும் ஆதனங்களின் இலக்கத்தையும் அனைவரும் இலகுவாக அறியக்குடிய வகையில் முதற்கட்டமாக உள்ளூராட்சிமன்ற வீதிகளில் 19 இற்கான பெயர்ப்பலகையும் வட்டாரம் 02 இற்கான வீட்டு இலக்கமும் பொருத்தப்பட்டது.

## வல்வெட்டித்துறை நகரசபையால் நடப்பு ஆண்டு மேற்கொள்ளப்பட்ட முன்னேற்ற நடவடிக்கைகள்

- சுற்றுச்சூழல் மேம்பாட்டுக்கான திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வு நடவடிக்கைகள் சிரமதானம் திங்கள் புதன், வெள்ளி ஆகிய நாட்களில் விசேட வீட்டுத்தரிசிப்புக்கள் மேற்கொள்ளல் போன்ற செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டது.
- 200 இற்கு மேற்பட்ட கட்டாக்காலி நாய்களிற்கு தடை மருந்து ஏற்றப்பட்டு இயக்கச்சி புனர்வாழ்வு மையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு 51 பெண் நாய்களுக்கு கருத்தடை சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டதுடன், வளர்ப்பு பெண் நாய்களுக்கான கருத்தடை சத்திரசிகிச்சை செய்வதற்கான செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டது.
- கைவிடப்பட்ட கிணறுகளுக்கு நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த மீன்குஞ்சுகள் வழங்க நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.
- அலுவலர்களுக்கான பயிற்சி நெறிகள் வழங்கப்பட்டது.
- **5S** நடைமுறைகளை செயற்படுத்து முகமாக உற்பத்தித்திறன் தொடர்பான பயிற்சிநெறி வழங்கப்பட்டது.
- அலுவலக நடைமுறை மற்றும் திண்மக்கழிவகற்றல் சம்மந்தமாக சுகாதாரத் தொழிலாளிகளுக்கு பயிற்சிப்பட்டறை மேற்கொள்ளப்பட்டது.
- கடந்த காலங்களில் நிலுவையாக இருந்த ஆதன வரிகளை நடுக்கட்டு உத்தியோகத்தர் மூலம் அறவிட்டு பெரும்பகுதி நிலுவை குறைக்கப்பட்டுள்ளது.

- CLDG திட்டத்தின் கீழ் பெண் உறுப்பினர்களின் மூலம் தெரிவு செய்யப்பட்ட 40 பயனாளிகளிற்கு வீட்டுத்தோட்டம் அமைக்கும் வகையில் ரூபா 880,000.00 பெறுமதியான நாற்றுக்கள், மரக்கன்றுகள் விவசாய உபகரணங்கள் வழங்கப்பட்டது.
- LDSP வேலைத்திட்டத்தின் கீழ் கெருடாவில் கந்தசாமி கோவில் ஒழுங்கை புனரமைப்பு செய்யப்பட்டு வேலைகள் நிறைவடைந்துள்ளது. தொண்டைமானாறு கழிவகற்றல் பிரதேசத்தில் களஞ்சிய அறை அமைக்கும் வேலைகள் நிறைவடைந்து இறுதிக் கொடுப்பனவும் வழங்கப்பட்டுள்ளது.
- சபை நிதியில் நடைபாதை பூங்காவிற்கான சுற்றுமதில் வாய்க்கால் புனரமைப்பு பூங்காவிற்கான உட்கட்டமைப்பு வசதிகள் வீதி அபிவிருத்தி போன்றன மேற்கொள்ளப்பட்டது.
- அலுவலக குடிநீர் தேவைக்கு குடிநீர் பெறுவதற்கான குழாய் பொருத்தப்பட்டது.
- தீருவில் பூங்கா JCB இயந்திரம் மூலம் துப்புரவு செய்யப்பட்டு சுற்றுலாப் பயணிகளுக்கான வசதிகள் ஏற்படுத்தப்பட்டன.
- ஆதனங்களுக்கான இலக்கத்தகடு பொருத்தப்பட்டது.
- ஆழிக்குமரன் ஆனந்தன் நீச்சல் தடாகம் மீள பொதுமக்கள் பயன்பாட்டிற்கு விடப்பட்டது.

**செயற்றிறன் பரிமாற்ற நிதி ஒதுக்கீட்டின் கீழ் பின்வருமாறு வேலைகள் மேற்கொள்ளப்பட்டன.**

1. பொதுநூலகத்தில் நவீன வசதிகளுடனான கணணி வசதி ஏற்படுத்தப்பட்டது.
2. அலுவலகப் பாவனைக்கான வாகனத்தை நவீன மயப்படுத்தி பாவனைக்கேற்ற விதமாக திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டது.
3. எமக்குச் சொந்தமான தீருவில் பூங்காவில் விளையாட்டு உபகரணங்கள் பொருத்தப்பட்டன.
4. வேலைப்பகுதி தொழிலாளர்களுக்கு தேவையான தொழில் உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டன.
5. வீதிகளுக்கான பெயர்ப் பலகைகள் பொருத்தப்பட்டன.
6. பொது இடங்களில் வைப்பதற்காக வெற்றுப் போத்தல் சேகரிப்பான்கள் கொள்வனவு செய்யப்பட்டன.
7. CDLG திட்டத்தின் கீழ் மாற்றுத்திறனாளிகளுக்கான வசதியை ஏற்படுத்துவதற்காக ரூபா 200,000.00 மதிப்பிலான வேலைத்திட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

## வல்வெட்டித்துறை நகரசபை எதிர்நோக்கும் சவால்கள்

- ✓ திரவக்கழிவகற்றலுக்குப் பொருத்தமான காணி இல்லை.
- ✓ பாதீட்டில் குறிப்பிடப்பட்ட வருமான இலக்கினை ஈட்டுவதில் கொவிட் 19, நாட்டின் பொருளாதார பிரச்சினை காரணமாக அடைய முடியாமை சவாலாக அமைந்துள்ளது.
- ✓ திண்மக்கழிவகற்றலுக்கு போதிய ஆளணியின்மையும் வாகனப் பற்றாக்குறையும்.
- ✓ நீச்சல் தடாகத்திற்கு போதிய ஆளணியின்மை.
- ✓ முன்பள்ளி அமைப்பதற்கான கட்டடம், காணி இல்லாமையால் முன்பள்ளி ஆசிரியர் ஆளணி வெற்றிடமாகவுள்ளது.

இ.சுரேன்.
தவிசாளர்

## 3.4 கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

'கணக்காய்வாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட இறுதி அறிக்கையினை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கும் அதேவேளை பதிவு செய்யப்பட்டு இங்கு முன்வைக்கப்படவேண்டும். '

2022 ம் ஆண்டிற்கான இறுதிஅறிக்கை இதுவரை கிடைக்கப்பெறவில்லை கிடைத்ததும் அனுப்பிவைக்கப்படும்.

## அத்தியாயம் 04 - செயலாற்றுகைக் குறிகாட்டிகள்

### 4.1 நிறுவனத்தின் செயலாற்றுகைக் குறிகாட்டிகள்

(செயற்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில்)

| விசேட குறிகாட்டிகள் | எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டின் சதவீதமாக (%) | | உள்ளபடியான வெளியீடு |
|---|---|---|---|
| | 100%-99% | 75%-89% | 100%-90% |
| வறுமை ஒழிப்பு | 100% | - | - |
| முன்பள்ளி சிறார்களுக்கான சத்துணவு வழங்கல் | - | - | 90% |
| சுகாதார வசதியினை மேம்படுத்தல் | - | 85% | - |
| உட்கட்டமைப்பு வசதிகள் | - | 80% | - |
| திண்மக்கழிவுகள் தரம்பிரித்தல் | - | 90% | - |
| நகரை ஒளியூட்டல் | | 85% | |
| குடிநீர் வழங்கல் | 100% | - | - |
| கொரனா தொற்று முற்காப்பு நடவடிக்கைகள் | 100% | - | - |
| தாய்சேய் நலன் சத்துணவு வழங்குதல் | 100% | - | - |

- பாதீட்டில் ஒதுக்கப்பட்ட,போசாக்குத் திட்டம் ,சிறுவர் நலனோம்பு, தேசிய வாசிப்பு மாதம், விளையாட்டுப் போட்டிகளும் கலாச்சார நிகழ்வுகள் ஆகிய நடவடிக்கைகள் இவ்வருடம் சிறப்பாக நடைபெற்றது.

## அத்தியாயம் 05

### நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களைப் (SDG) அடைந்து கொள்தல் பற்றிய செயற்றின்.

## 5.1 அடையாளம் காணப்பட்ட உரிய நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை சுட்டிக்காட்டுக

| இலக்கு/குறிக்கோள் | இலக்குகள் | அடைவுக் குறிகாட்டிகள் | இது வரையிலான அடைவு முன்னேற்றம் | | |
|---|---|---|---|---|---|
| | | | 0%-49% | 50%-74% | 75%-100% |
| வறுமை ஒழிப்பு, (No Poverty) | சுயதொழில் முயற்சியினை ஊக்குவிக்கும் வகையில் அதற்குரிய உபகரணங்களை வழங்குதல் | Goal 1 | - | - | 100% |
| பசியின்மையை நீக்க்குதல் | தாய்சேய் சத்துணவுவழங்கலும் முன்பள்ளி சிறார்களுக்கான சத்துணவு வழங்கலும் | Goal 2 | - | | 100% |
| ஆரோக்கியம் மற்றும் நலனோம்பு (Good Heath & well being) | கொரோனா தொற்றுநோய் பரவலைக் கட்டுப்படுத்தியமை<br>திண்மக்கழிவு முகாமைத்துவத் திட்டத்தை நடைமுறைப்படுத்தியமை<br>டெங்கு ஒழிப்புத் திட்டத்தை அமுல்படுத்தியமை.<br>நகரசபை எல்லைக்குட்பட்ட பிரதேசத்தை பசுமை மிக்க நகரமாக மாற்றுவதற்காக மரநடுகைத் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகின்றது<br>அலுவலக உத்தியோகத்தர் ஊழியர்களுக்கு கொரோனோ பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கப்பட்டது<br>உத்தியோகத்தர் ஊழியர்களுக்கு வாராந்தம் ஒரு நாளில் இலைக்கஞ்சி சத்துணவு வழங்கப்படுகின்றது | Goal 3 | - | - | 90% |
| தரமான கல்வி (Quality Education) | சபைக்கு சொந்தமான பொது நூலகத்தினை E-Library ஆக மாற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.<br><br>நூலகத்தில் கணனி , Photocopy இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டு மாணவர்களின் பாவனைக்கு விடப்பட்டுள்ளது<br><br>வருடா வருடம் மாணவா்களுக்கு தேவையான நூல்கள் கொள்வனவு செய்யப்பட்டு மாணவா்கள் கற்பதற்கான கல்வி வசதியினை மேம்படுத்தப்படுகின்றது<br><br>தேசிய வாசிப்பு மாத நிகழ்வு நடைபெற்றுள்ளது | Goal 4 | - | - | 90% |
| ஆண் பெண் சமத்துவம் (Gender equality) | அலுவலகத்தில் கடமைபுரிபவா்கள் மற்றும் சேவை பெறுநா்களுக்கு ஆண் பெண் சமத்துவம் பேணப்படுகின்றது<br><br>சமூக மட்ட அமைப்புக்களில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கப்படுகின்றது | Goal 5 | - | - | 95% |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| சுத்தமான குடிநீர் வழங்கல் மற்றும் சுகாதாரம் பேணல் (Clean Water and Sanitation) | சுத்தமான குடிநீர் வழங்கப்படுகின்றது<br><br>உணவகங்கள் மற்றும் சிற்றுண்டி தயாரிக்கும் சிறுகைத்தொழில் செய்வோருக்கு மருத்துவப்பரியோதனை மேற்கொள்ளப்பட்டது<br><br>உணவகங்களில் காலாவதியான பொருட்களின் விற்பனை தடைசெய்யப்பட்டது<br>வாய்க்கால்கள் துப்பரவாக்கப்பட்டது<br><br>வடிகால்கள் புனரமைக்கப்பட்டது | Goal 6 | - | - | 100% |
| கௌரவமான வேலைவாய்ப்பின் பொருளாதார வளர்ச்சியினை முன்னிறுத்தல் | உள்ளூர் உற்பத்திப்பொருட்களுக்கான கருவிகள் உபகரணங்கள் வழங்கப்பட்டது. | Goal 8 | - | - | 95% |
| தொழிற்துறைப் புத்தாக்கம் மற்றும் உட்கட்டமைப்பு | விவசாயத்திற்கு தேவையான கருவிகள் வழங்கியமை<br>கைத்தொழில் ஊக்குவித்தல் (கருவிகள் உபகரணங்கள்) வழங்கியமை<br>வீதிகள், வாய்க்காலகள் புனரமைத்தமை<br><br>வீதிகளுக்கு ஒளியூட்டியமை<br><br>சந்தை உட்கட்டமைப்பு வசதி மேம்படுத்தப்பட்டது<br><br>புதிதாக வாய்க்கால்கள் அமைக்கப்பட்டமை | Goal 9 | - | - | 95% |
| நிலைபேறான நகரங்களையும் குடியிருப்புக்களையும் அமைத்தல் | ஆதிகோவிலடி வடிகால் அமைக்கப்பட்டமை, தொண்டைமனாறு ஆற்றங்கரை நடைபாதை அமைக்கப்பட்டமை<br>தீருவில் பூங்கா சுற்றுமதில் அமைக்கப்பட்டமை ,<br>நெற்கொழு மூன்றாம் வீதி அமைக்கப்பட்டமை,<br>சமத்தனை 4 ஆம் குறுக்கு வீதி அமைக்கப்பட்டமை | Goal 11 | - | - | 90% |
| நில வளங்கள் | மர நடுகைத்திட்டம் மேற்கொள்ளப்பட்டது | Goal 15 | - | - | 95% |

**5.2 நிலைத்துநிற்கும் அபிவிருத்திக் குறிக்கோள்களின் அடைவுகளையும் சவால்களையும் சுருக்கமாக விளக்குக.**

**அடைவுகள்**

- பூங்காவிற்கான விளையாட்டு உபகரணங்கள், வேலைப்பகுதிக்கான உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.
- தினசரி உக்கும் திண்மக்கழிவுகள் முறையாக சேகரிக்கப்பட்டு சேதனப் பசளையாக்கும் நிலையத்திற்கு அனுப்பப்படுதல் மற்றும் உக்கும் உக்காத திண்மக்கழிவுகள் பொருத்தமான கால அட்டவணைப்படி வாராந்தம் சேகரிக்கப்படுதல்.
- பிளாஸ்ரிக் போத்தல்கள் சேகரிப்பான்கள் பொது இடங்களில் வைக்கப்பட்டுள்ளது.
- கண்ணாடி, இரும்பு, பிளாஸ்ரிக் பொருட் கழிவகற்றல் முகாமைத்துவத்திற்கு களஞ்சிய அறை அமைக்கப்பட்டுள்ளது.
- பிளாஸ்ரிக் போத்தல்கள் மற்றும் ஏனைய வகையான பிளாஸ்ரிக் மீள் சுழற்சி நிலையத்திற்கு விற்பனை செய்யப்படல்.

**சவால்கள்**

- அட்டவனைப்படுத்தப்படாத ஆளணி வெற்றிடங்கள் காணப்படுகின்றமையும் வெற்றிடங்களை நிரப்புவதற்கான அனுமதி கிடைக்கப்பெறாமையும்.
- கலிபவுசர்கள் மூலம் சேகரிக்கப்படும் திண்மக் கழிவுகளை மாரிகாலங்களில் கொட்டுவதற்கு பொருத்தமான இடமின்மையால் வருடம் முழுவதும் சேவையை வழங்க முடியாமை.
- பொதுமக்களின் ஒத்துழைப்பின்மையாலும் போதிய வாகன வசதியின்மையாலும் திண்மக் கழிவகற்றல் சேவையினை வினைத்திறனுடன் ஆற்ற முடியாமை.
- மூலப்பொருட்களின் விலையேற்றம் காரணமாக வேலைத்திட்டங்களை நிறைவேற்ற முடியாமை.

## அத்தியாயம் 06 - மனித வள விபரக்குறிப்பு

### 06.1 பதவியணி முகாமைத்துவம்

| பதவி | அனுமதியளிக்கப் பட்ட பதவியணி | தற்போதுள்ள பதவியணி | வெற்றிடங்கள்\ (மிகை) |
|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| செயலாளர் | 1 | 1 | |
| கணக்காளர் | 1 | 1 | |
| நிர்வாக உத்தியோகத்தர் | 1 | 0 | 1 |
| நிர்வாக உத்தியோகத்தர்( மிகை ஆளணி) | - | 1 | |
| பொதுச்சுகாதர பரிசோதகர் | 1 | 1 | |
| உள்ளு;ராட்சி உதவியாளர் | 1 | 1 | |
| அபிவிருத்தி உத்தியோகத்தர் | 10 | 23 | 13 |
| நூலகர் | 1 | 1 | |
| தொழில்நுட்ப உத்தியோகத்த்ர்(சிவில்) | 2 | 2 | |
| முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் | 13 | 13 | |
| வருமான பரிசோதகர் | 2 | 2 | |
| முன்பள்ளி ஆசிரியர் | 1 | 0 | 1 |
| நீச்சல் பயிற்றுவிப்பாளர் | 1 | 0 | 1 |
| சுகாதார மேற்பார்வையாளர் | 1 | 0 | 1 |
| சாரதி | 5 | 4 | 1 |
| காரியாலய காரிய சகாயர் | 3 | 1 | 2 |
| காவலாளி | 2 | 2 | |
| சுகாதாரத் தொழிலாளி | 33 | 23 | 10 |
| நூலக உதவியாளர் | 1 | 1 | |
| சந்தை பாதுகாவலலர் | 1 | 0 | 1 |
| வேலை வெளிக்கள தொழிலாளி | 6 | 6 | |
| நீச்சல்தடாகப் பராமரிப்பாளர் | 2 | 0 | 2 |

### 6.2 **மனித வளங்களில் பற்றாக்குறை அல்லது மிகையானது எவ்வாறு நிறுவனத்தின் செயற்றிறனை பாதித்துள்ளது என்பதை சுருக்கமாக குறிப்பிடுக.**

ஆளணி பற்றாக்குறையானது நகராட்சி மன்ற மக்களுக்கு திருப்தியானதும் வினைத்திறனுமான சேவையை ஆற்றுவதில் முக்கியமான சவால்களில் ஒன்றாக அமைகின்றது. ஆளணி பற்றாக்குறையானது உத்தியோகத்தர்களுக்கு உளத்தாக்கத்தினை ஏற்படுத்துவதால் அலுவலகச் செயற்பாடுகளில் ஸ்தம்பித நிலை காணப்படுகின்றது.

### 6.3 **அலுவலர் குழாத்தின் ஆற்றல் விருத்தி**

| தொ. இல | பயிற்சி நிகழ்வின் பெயர் | பயிற்சி நிகழ்வின் நோக்கம் | பயிற்சி பெற்ற ஊழியர் எண் | நிகழ்ச்சிதிட்டத்தின் காலஅளவு | மொத்த நிதி முதலீடு(அரச பயன்படுத்தப்பட்டிருத்தல்) | பயிற்சி நிகழ்வின் தன்மை (உள்நாடு/ வெளிநாடு) | வெளியீடு |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | Training Programme on methods to create public Awareness through social network& Internet | Network & Internet தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ளல் | 03 | 15.11.2022 09.00-04.00pm | | உள்நாடு | அலுவலகத்தில் இணைய வசதியினைப் பெறல் |
| 02 | Web Designing | உள்ளுர் மன்றங்களின் தகவல்களினை இலத்திரணியல் மயமாக்கல் | 01 | 16.12.2022 09.15-04.15pm | | உள்நாடு | Web Designing தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ளல் |
| 03 | வருவாய் ஆய்வாளருக்கான நீதிமன்ற நடவடிக்கைகள் | சட்ட நடவடிக்கைகளை அமுல்படுத்துதல் | 02 | 26.11.2022 (08.30-04.15) 28.11.2022 (08.30-04.15) 29.11.2022 (08.30-04.15) | | உள்நாடு | வரிகள் தொடர்பான அறிவினைப் பெற்றுக்கொள்ளல் |
| 04 | Workshop on Tender Procedure | அபிவிருத்தி தொடர்பான அறிவினைப் பெற்றுக் கொள்ளல் | 03 | 14.11.2022 (9.00-01.00pm) 15.11.2022 (9.00-01.00pm) | | உள்நாடு | அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளக் கூடியதாக இருந்தது. |
| 05 | கொள்வனவு தொடர்பான பயிற்சி | கொள்வனவு தொடர்பாக பயிற்சி வழங்கல் | 02 | 16.11.2022 | | உள்நாடு | கொள்வனவு தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ளல் |
| 06 | Trainning of Bid Evaluation | Project தொடர்பான பயிற்சி | 02 | 02.12.2022 09.00 am | | உள்நாடு | அலுவலக வேலைத்திட்டங்க சரியாகச் செய்தல் |
| 07 | Tips For Periodical Maintanence of Public Assets | பணியாற்றும் உத்தியோகத்தர்களது இயலளவைக் கட்டியெழுப்புதல் | 04 | 09.12.2022 (08.30-04.30) | | உள்நாடு | பொதுச் சொத்துக்களை எவ்வாறு கையாள்வது தொடர்பான அறிவினைப் பெற்றுக்கொள்ளல் |
| 08 | Capacity Building Workshop on Presentation of Annual Reports | Capacity Building | 02 | 23.11.2022 09.00 am | | உள்நாடு | வருடாந்த அறிக்கைகளை முன்மொழிந்து நடைமுறைப்படுத்தல் |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 09 | Programme on Greeen Building | Environmental Protection | 03 | 15.09.2022 (08.45 am) | | உள்நாடு | சூழல் பாதுகாப்பு தொடர்பான அறிவைப் பெற்றுக்கொள்ளல் |
| 10 | Stores & Inventories | இருப்புக்களை எவ்வாறு களஞ்சியப்படுத்தல் | 06 | 07.09.2022 (08.30-04.30) | | உள்நாடு | இருப்புக்களை களஞ்சியப்படுத்தல் |
| 11 | திண்மக்கழிவு முகாமைத்துவம் தொடர்பான பயிற்சி நெறி. | பணியில் ஈடுபடும் ஊழியர்களின் பௌதீக ரீதியான பாதுகாப்பும் தொற்று நோய்கள் பற்றிய விழிப்புணர்வும் | 28 | 26.10.2022 13.15 PM– 16.30 P.M | 9,600.00 | உள்நாடு | திண்மக்கழிவு முகாமைத்துவம் முறையாக செயற்பட்டு வருகின்றது. |
| 12 | உளநல விருத்தி தொடர்பான பயிற்சி நெறி | ஊழியர்களுக்கிடையே யான நல்லிணக்கம் புரிந்துணர்வு மற்றும் ஒற்றுமையாக வேலையாற்றுதல் | 27 | 2022 08.25 2.00 PM – 4.30 PM | 10,200.00 | உள்நாடு | ஊழியர்களிற்கிடையே யான நல்லிணக்கம். |
| 13 | சேவைத் தளத்தில் ஊழியர்களின் பாதுகாப்பு தொடர்பான செயலமர்வு | கடமையில் ஈடுபடும் போது உரிய பாதுகாப்பு அங்கி , கவசம் அணிதல் தொடர்பானது. | 33 | 12.12.2022 2.00PM-4.00PM | Save life | உள்நாடு | கடமையில் ஈடுபடும் போது பாதுகாப்பான அங்கி பாதணி அணிதல் |
| 14 | தாபன, மற்றும் நிதிப் பிரமாண செயலமர்வு | தாபன, மற்றும் நிதிப்பிரமாணம் தொடர்பானது | 32 | 23.11.2022 12.30PM- 4.30PM | 9600.00 | உள்நாடு | தாபன, மற்றும் நிதிப் பிரமாணம் தொடர்பான அறிவைப் பெற்றுக் கொள்ளல் |

**“ பயிற்சி நிகழ்ச்சித் திட்டமானது எவ்வாறு நிறுவனத்தின் செயற்றிறனுக்குப் பங்களிப்புச் செய்தது என்பதை சுருக்கமாக குறிப்பிடுக.”**

பயிற்சி நிகழ்ச்சி திட்டமானது உத்தியோகத்தர்களின் ஆளுமையை விருத்தி செய்து அலுவலக கடமைகளை வினைத்திறனாக செயற்பட உதவுகின்றது

## அத்தியாயம் 07 - இணக்கப்பாட்டு அறிக்கை

| தொடர்படுத்தப்பட வேண்டிய தேவைப்பாடு | இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கப்பாடானது/ இணக்கப்பாடற்றது) | இணக்கப்பட்டற்றது எனின் அதற்கான சுருக்க விளக்கம் | இணக்கமின்மையை எதிர்காலத்தில் தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரிசெய்யும் நடவடிக்கைகள் |
|---|---|---|---|
| **1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்** | | | |
| 1.1 மீளாய்வின் கீழான ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்களானவை உரிய திகதியளவில் முன்வைக்கப்பட்டிருந்தன. | **இணங்கியுள்ளது** | | |
| **2 கணக்காய்வுக்குப் பதிவளித்தல்** | | | |
| 2-1 கணக்காய்வாளர் நாயகத்தினால் குறித்துரைக்கப்பட்ட திகதியில் கணக்காய்வுக் கேள்விக்கு பதிலளிக்கப்பட்டுள்ளது. கணக்காய்வாளர் நாயகம் | **இணங்கியுள்ளது** | | |
| 2-2 முன்னைய வருடங்களில் கணக்காய்வாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்ட கணக்காய்வுக் கேள்விகளில்/கணக்காய்வுப் பந்திகளில் சுட்டிக் காட்டப்பட்டு குறைபாடுகள் சரி செய்யப்பட்டுள்ளன. | **இணங்கியுள்ளது** | | |
| **3 திட்டங்கள்** | | | |
| 3-1 நிறுவனத்தின் வருடாந்த செயற்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. | **இணங்கியுள்ளது** | | |
| 3-2 மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டுத் திட்டத்திற்கு உரிய தினத்தில் அனுமதி பெறப்பட்டுள்ளது. | **இணங்கியுள்ளது** | | |
| 3-3 மீளாய்வாண்டிற்கான வரவுசெலவுத்திட்டத்திற்கு அனுமதி பெறப்பட்டுள்ளது. | **இணங்கியுள்ளது** | | |
| 3-4 வருடாந்த பெறுகைத் திட்டம் உரிய தினத்தில் தயாரிக்கப்பட்டுள்ளது. | **இணங்கியுள்ளது** | | |
| **4 கட்டண நிருவாகம்** | | | |
| 4-1 கட்டணம் அறவிடப்படும் ஆதனங்கள் 05 வருடங்களுக்கு ஒருமுறை விலைமதிப்பீடு செய்யப்பட்டுள்ளன. | **இணங்கியுள்ளது** | | |
| 4-2 மீளாய்வாண்டிற்கான விலைப்பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ள வருமானத்தில் 70% அந்த வருடத்திலேயே சேகரிக்கப்பட்டுள்ளது. | **இணங்கியுள்ளது** | | |
| 4-3 நிலுவையிலுள்ள கட்டணங்களை அறவிடுவதற்காக அழைப்பாணை வழங்கப்பட்டுள்ளது | **இணங்கியுள்ளது** | | |
| **5 வாடகை நிருவாகம்** | | | |
| 5-1 வருடாந்தம் வாடகைக்கு வழங்கப்பட்டுள்ள அனைத்து ஆதனங்களும் (இறைச்சிக் கடைகள்/மீன் கடைகள்/பொது வாரச் சந்தைகள்) மீளாய்வாண்டில் வாடகைக்கு வழங்கப்பட்டுள்ளன. | **இணங்கியுள்ளது** | | |
| 5-2 வருடாந்தம் வாடகைக்கு வழங்கப்படும் ஆதனங்கள் தொடர்பில் ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்பட்டுள்ளன. | **இணங்கியுள்ளது** | | |
| 5-3 வருடாந்தம் வாடகைக்கு வழங்கப்படும் ஆதனங்களிலிருந்து அறவிடப்பட வேண்டிய வரிகள் அறவடப்பட்டுள்ளன. | **இணங்கியுள்ளது** | | |

| | | | |
|---|---|---|---|
| 5-4 நிலுவையாகவுள்ள தொகைகளைஅறவிடுவதற்காகச் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | சந்தர்பபம் ஏற்படவில்லை | | |
| 5-5 நீண்ட காலத்திற்கு வாடகைக்கு வழங்கப்பட வேண்டிணருந்த ஆதனங்கள் வாடகைக்கு வழங்கப்பட்டுள்ளன. | இணங்கியுள்ளது | | |
| 5-6 நீண்ட காலத்திற்கு வாடகைக்கு வழங்கப்பட வேண்டியிருந்த ஆதனங்கள் தொடர்பில் ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்பட்டுள்ளன. | இணங்கியுள்ளது | | |
| **6 வியாபார வரிகள் மற்றும் விற்பனை அனுமதிப்பத்திர நிர்வாகம்** | | | |
| 6-1 மீளாய்வாண்டில் வியாபார வரிகளையும் விற்பனை அனுமதிப்பத்திரக் கட்டணங்களயும் சேகரிப்பதற்கு மதிப்பாய்வொன்று நடாத்தப்பட்டுள்ளது. | இணங்கியுள்ளது | | |
| 6-2 அனுமதிப்பத்திரம் பெற்றிராத வியாபார நிலையங்களுக்கு எதிராக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. | சந்தர்பபம் ஏற்படவில்லை | | |
| **7 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கூட்டங்கள்** | | | |
| 7-1 ஆகக் குறைதது 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கூட்டங்கள் குறித்த வருடத்தினுள் நடாத்தப்பட்டுள்ளன. | இணங்கியுள்ளது | | |
| **8 வங்கி கணக்கு முகாமை** | | | |
| 8-1 உரிய தினத்தில் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு சான்றுப்படுத்தி கணக்காய்வுக்காகத் தயார்படுத்தப்பட்டுள்ளன. | இணங்கியுள்ளது | | |
| 8-2 மீளாவாண்டில் அல்லது அதற்கு முன்னைய வருடங்களிலிருந்து வந்துகொண்டிருந்த செயற்பாடற்ற வங்கிக் கணக்குகளுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது. | இணங்கியுள்ளது | | |
| **9 சொத்து முகாமை** | | | |
| 9-1 அனைத்துச் சொத்துக்களும் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. | இணங்கியுள்ளது | | |
| 9-2 அனைத்துச் சொத்துக்களினதும் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. | இணங்கியுள்ளது | | |
| 9-3 அனைத்துச் சொத்துக்களும் கையகப்பத்தப்பட்டுள்ளன. | இணங்கியுள்ளது | | |
| 9-4 05/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கைக்கு இணங்க, பொருட்தொகை மதிப்பாய்வுகள் நடாத்தப்பட்டுள்ளதுடன் குறித்த அறிக்கைகள் உரிய தினத்தில் கணக்காய்வாளர் நாயகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | இணங்கியுள்ளது | | |
| 9-5 வருடாந்த பொருட் தொகை மதிப்பாய்வின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட மிகைகள்,பற்றாக்குறைகள் மற்றும் ஏனைய சிபாரிசுகள் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | இணங்கியுள்ளது | | |
| 9-6 கழித்தொதுக்கப்பட்ட பொருட்கள் நி.பி 772 இற்கு இணங்க அகற்றப்பட்டுள்ளன. | இணங்கியுள்ளது | | |
| **10 வாகன முகாமை** | | | |

| | | | |
|---|---|---|---|
| 10-1 தொகுதியிலுள்ள வாகனங்களுக்கான நாளாந்த ஓட்டக் குறிப்புக்கள் மற்றும் மாதாந்தச் சுருக்க அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு உரிய தினத்தில் கணக்காய்வாளர் நாயகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | இணங்கியுள்ளது | | |
| 10-2 வாகனங்கள் கழித்து ஒதுக்கப்பட்டு 06 மாதங்களுக்கு குறைவான காலத்தில் அகற்றப்பட்டுள்ளன. | இணங்கியுள்ளது | | |
| 10-3 வாகனச் சம்பவத் திரட்டுப் புத்தகங்கள் பேணப்பட்டு அவை இற்றைப்படுத்தப்பட்டுள்ளன. | இணங்கியுள்ளது | | |
| 10-4 ஒவ்வொரு வாகன விபத்து தொடர்பிலும் நி.பி. 103, 104, 109, 110, என்பனவற்றுக்கு இணங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | இணங்கியுள்ளது | | |
| 10-5 2016.12.29 ஆம் திகதிய 2016/30 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க. வாகங்களில் எரிபொருள் தகனம் மீளப் பரிசோதிக்கப்பட்டுள்ளன. | இணங்கியுள்ளது | | |
| 10-6 நிறுவனத்தில் வாகனப் பராமரிப்பு ஆவணமொன்று பேணப்பட்டு வருகின்றது. | இணங்கியுள்ளது | | |
| 10-7 நிறுவனத்தில் எரிபொருள் ஆவணமொன்று பேணப்பட்டு வருகின்றது. | இணங்கியுள்ளது | | |
| **11 பதவியணி முகாமை** | | | |
| 11-1 அனுமதியளிக்கப்பட்ட பதவியணி வரையறையினுள் பதவியணியினர் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | இணங்கியுள்ளது | | |
| 11-2 பதவியணியின் அனைத்து அங்கத்தவர்களுக்கும் கடமைப் பட்டியல்கள் எழுத்து மூலம் வழங்கப்பட்டுள்ளன. | இணங்கியுள்ளது | | |
| 11-3 2017.09.20 ஆம் திகதிய 04/2017 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைச் சுற்றறிக்கைக்கு இணங்க அனைத்து அறிக்கைளும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டன. | இணங்கியுள்ளது | | |
| **12 மிகப் பிந்திய இற்றைப்படுத்தல்களுடன் ஏடுகளையும் பட்டியல்களையும் பேணி வருதல்** | | | |
| 12-1 காணிகள் மற்றும் கட்டடப் பட்டியல் | இணங்கியுள்ளது | | |
| 12-2 நிலையான சொத்துக்களின் பதிவேடு | இணங்கியுள்ளது | | |
| 12-3 ஒப்பந்தக்காரர்களின் பதிவேடு | இணங்கியுள்ளது | | |
| 12-4 கணக்காய்வுக் கேள்வி ஆவணங்கள் | இணங்கியுள்ளது | | |
| 12-5 காசோலைகள் மற்றும் காசுக் கட்டளைகள் ஆவணங்கள் | இணங்கியுள்ளது | | |
| 12-6 பொருட் பட்டியல் | இணங்கியுள்ளது | | |
| 12-7 நுகர்வோர் பண்டப் பட்டியல் | இணங்கியுள்ளது | | |
| 12-8 நட்டங்கள் தொடர்பான பதிவேடுகள் | இணங்கியுள்ளது | | |
| 12-9 அடிக்கட்டைப் புத்தகப் பதிவேடுகள் | இணங்கியுள்ளது | | |

| | | | |
|---|---|---|---|
| 12.10 முற்பணப் பதிவேடுகள் | இணங்கியுள்ளது | | |
| 12-11 கைத்தொழில்/ வியாபார வரிப் பதிவேடு | இணங்கியுள்ளது | | |
| 12-12 கடன் பெற்றோர் பதிவேடு | இணங்கியுள்ளது | | |
| 12-13 கடன் உரிமையாளர் பதிவேடு | இணங்கியுள்ளது | | |
| 12-14 கேள்விப்பத்திரச் சபைத் தீர்மானப் பதிவேடு | இணங்கியுள்ளது | | |
| 12-15 வீதி விளக்குப் பதிவேடு | இணங்கியுள்ளது | | |
| 12-16 அளவைப் புத்தகம் | இணங்கியுள்ளது | | |
| 12-17 வீதிப் பதிவேடு | இணங்கியுள்ளது | | |
| 12-18 காணித் துண்டுப் பதிவேடு | இணங்கியுள்ளது | | |
| 12-19 கட்டட விண்ணப்பப் பதிவேடு | இணங்கியுள்ளது | | |
| 12-20 இணக்கப்பாட்டு மதிப்பீட்டுப் பதிவேடு | இணங்கியுள்ளது | | |
| **13 கழிவுப் பொருள் முகாமை** | | | |
| 13-1 தேசிய கொள்கைகளுக்கு இணங்க கழிவுப் பொருள் முகாமைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது | இணங்கியுள்ளது | | |
| 13-2 சபையின் எல்லைக்குள் குப்பைகள் சேகரிக்கப்பட்ட வேறுபடுத்தப்பட்டுள்ளன. | இணங்கியுள்ளது | | |
| **14 சுற்றாடல் செயற்பாடுகள்** | | | |
| 14-1 பிரதேசத்தினுள் ஒழுங்கின்றி குப்பைகளை அகற்றுவதனால் சுற்றாடலுக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. | இணங்கியுள்ளது | | |
| 14-2 பிரதேசத்தின் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் தீங்குவிளைவிக்கும் கழிவுப் பொருட்களினால் சுற்றாடலுக்கு ஏற்படும் அழிவைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | இணங்கியுள்ளது | | |
| **15 துணைச் சட்டங்கள்** | | | |
| 15-1 மாநகர சபைகள், பிரதேச சபைகள் கட்டத்தின் 272 ஆம் பிரிவு/ நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 157 ஆம் பிரிவு/ பிரதேச சபைச் சட்டத்தின் 126 ஆம் பிரிவு என்பவற்றுக்கு இணங்க துணைச் சட்டங்கள் இயற்றப்பட வேணடிய நோக்கங்களுக்காக துணைச் சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன. | இணங்கியுள்ளது | | |
| 15-2 மேலே குறிப்பிட்ட துணைச் சட்டங்கள் தொடர்பில் சபையினால் மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடுகள் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையில் குறிப்பிடப்பிடப்பட்டுள்ளன. | இணங்கியுள்ளது | | |
| 15-3 அச் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்காக வருடாந்த வரவுசெலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. | இணங்கியுள்ளது | | |
| **16 பொது மக்களுக்குத் தகவல்கள் வழங்குதல்** | | | |
| 16-1 தகவலறியும் சட்டத்திற்கு இணங்க தகவல் உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டு தகவல் வழங்குவதற்கான உரிய பதிவேடு ஒன்று பேணப்பட்டு வந்துள்ளது. | இணங்கியுள்ளது | | |

| | | | |
|---|---|---|---|
| 16-2 நிறுவனம் தொடர்பான தகவல்கள் அதன் இணையதளத்தின் ஊடாக வழங்கப்பட்டுள்ளதுடன். இணையதளத்தின் ஊடாக அல்லது மாற்று வழிகளின் ஊடாக நிறுவனம் தொடர்பில் பாராட்டுவதற்கு/ குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதற்கு பொது மக்களுக்கு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. | **இணங்கியுள்ளது** | நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | |
| 16-3 தகவலறியும் சட்டத்தின் 08 மற்றும் 10 ஆம் பிரிவுகளுக்கு இணங்க வருடத்திற்கு இரு முறை அல்லது வருடத்தில் ஒரு முறை அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | **இணங்கியுள்ளது** | | |
| **17 கட்டட வரைபடங்களுக்கு அங்கீகாரம் வழங்குதல்** | | | |
| 17-1 சபைக்கு கிடைக்கப்பெறும் அனைத்து கட்டட வரைபடங்களையும் அறிவிப்பதற்கு பதிவேடொன்று பேணப்பட்டு அவ்வரைபடங்கள் கிடைத்த திகதிகள் மற்றும் அவை தொடர்பில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட திததிகள் அதில் குறிக்கப்பட்டுள்ளன. | **இணங்கியுள்ளது** | | |
| 17-2 விண்ணப்பங்களில் உள்ள சிக்கல்கள் தொடர்பில் 05 நாட்களுக்குள் உரிய ஆட்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | **இணங்கியுள்ளது** | | |
| 17-3 விண்ணப்பங்கள் கிடைத்து ஒரு வார காலத்தினுள் நடாத்தப்படும் வரைபடக் குழுவின் முதலாவது கூட்டத்திலேயே விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன | **இணங்கியுள்ளது** | | |
| 17-4 பிரசைகள் பட்டயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள குறித்துரைக்கப்பட்ட திகதியில் (8 வாரங்களுக்குள்) 80% இற்கும் அதிகமான கட்டட வரைபடங்களுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. | **இணங்கியுள்ளது** | | |
| **18 பிரசைகள்பட்டயத்தை நடைமுறைப்படுத்துதல்** | | | |
| 18-1 05/2018 மற்றும் 05/2018 (1) ஆம் இலக்க பொது நிருவாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் சுற்றறிக்கைகளுக்கு இணங்க பிரசைகள்/ வாடிக்கையாளர் பட்டயமொன்று இயற்றப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. | **இணங்கியுள்ளது** | | |
| 18-2 அச்சுற்றறிக்கையின் 2.3 ஆம் பந்திக்கு இணங்க, பிரசைகள்/ வாடிக்கையாளர் பட்டயத்தை இயற்றி நடைமுறைப்படுத்தும் செயற்பாடுகளை மேற்பார்வை செய்வதற்காகவும் மதிப்பீடு செய்வதற்காகவும் நிறுவனத்தினால் முறைமையொன்று உருவாக்கப்ப்டுள்ளது. | **இணங்கியுள்ளது** | | |

| | | | |
|---|---|---|---|
| **19 மனித வளத் திட்டத்தை உருவாக்குதல்** | | | |
| 19-1 2018.01.24 ஆம் திகதிய 02/2018 ஆம் இலக்க நிருவாகச் சுற்றறிக்கையின் இணைப்பு 02 இலுள்ள மாதிரிக்கமைவாக மனிதவள திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. | **இணங்கியுள்ளது** | | |
| 19-2 அலுவலர் குழாத்தின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் வருடமொன்றுக்கு 12 மணித்தியாலத்திற்குக் குறையாத குறைந்த பட்ச பயிற்சி வாய்ப்பொன்றானது மேற்கூறப்பட்ட மனித வளத் திட்டத்தில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. | **இணங்கியுள்ளது** | | |
| 19-3 மேற்கூற்பபட்ட சுற்றறிக்கையின் இணைப்பு 01 இலுள்ள மாதிரியின் அடிப்படையில் முழு அடுலுவலர் குழாத்தினருக்கும் வருடாந்தச் செயற்றிறன் உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டுள்ளன. | **இணங்கியுள்ளது** | | |
| 19-4 மேற்கூறப்பட்ட சுற்றறிக்கையின் 6.5 ஆம் பந்திக்கு அமைவாக சிரேஸ்ட உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டதுடன் ஆற்றலைக் கட்டியெழுப்பும் நிகழ்ச்சிதிட்டங்களை நடாத்தியும் மனித வள அபிவிருத்தித் திட்டத்தைத் தயாரிக்கும் பொறுப்பு அவருக்குக் குறித்தொதுக்கப்பட்டது . | **இணங்கியுள்ளது** | | |
| **20 இலத்திரனியல் உள்ளூராட்சி முறையொன்றை ஸ்தாபித்தல்** | | | |
| 20-1 2018.07.19 ஆம் திகதிய2018/ e-Local Government-01 ஆம் இலக்க உள்ளூராட்சிச் சுற்றறிக்கைக்கு இணங்க இணையவழி மூலம் ஊடாக விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கான வசதி பிரசைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. | **இணங்கியுள்ளது** | **நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது** | |
| 20-2 இணையவழி மூலம் கொடுப்பனவுகளைச் செய்வதற்கான வசதி பிரசைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது | **இணங்கியுள்ளது** | **நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது** | |
| 20-3 மக்கள் நட்புறவு சேவையொன்றை வழங்குவதற்கு ‘முன்னணி அலுவலகங்கள் வாடிக்கையாளர் சேவை நிலையங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன | **இணங்கியுள்ளது** | | |

**முற்றும்.**